# காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டியக்கத்தினர் ஆர்ப்பாட்டம்

**மதுரை,ஜூன்26:** சித்ரவதைக்கு எதிரான தடுப்புச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டியக்கம் சார்பில் மதுரையில் புதன் கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலை பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு அந்த இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா.அண்ணாத்துரை தலைமை வகித்தார். அதன் ஆலோசகர் ஹென்றி திபேன், கூட்டியகத்தின் செயலர் மீ.த. பாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டியக்கத்தினர்.

அப்போது, சித்ரவதைக்கு எதிரான தடுப்புச் சட்டத்தை மத்திய, மாநில அரசுகள் இயற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மனித உரிமைக் காப்பாளர்கள் பாதுகாப்பு சட்டத்தை இயற்ற வேண்டும். கள்ளக்குறிச்சி விஷசாராய மரணங்களுக்கு காரணமான மதுவிலக்கு காவல் துறை அதிகாரிகள் மீது வழக்குப் பதிந்து அவர்களைக் கைது செய்ய வேண்டும்.

மனித உரிமைகளுக்கு எதிரான 'ஊபா' சட்டத்தை உடனடியாக திரும்பப்பெற வேண்டும். எழுத்தாளர் அருந்ததிராய் மீதான வழக்கை திரும்பப் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மண்டல பொறுப்பாளர் மாலின், தமிழ்ப்புலிகள் கட்சி பொதுச் செயலர் பேரறிவாளன், மனித மக்கள் கட்சி சீனிமுகமது, எஸ்டிபிஐ கட்சி சீமான் சிக்கந்தர், மதிமுக ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினர் மகபூப் ஜான், தலித் விடுதலை இயக்கம் ச.கருப்பையா, திராவிடர் விடுதலைக் கழகம் மணி அமுதன், தந்தைப் பெரியார் திராவிடர் கழகம் தமிழ்ப்பித்தன், தமிழ்த்தேச மக்கள் முன்னணி ஆரோக்கிய மேரி, மகளிர் ஆயம் அருணா உள்ளிட்டோர் பேசினர். தமிழ்த்தேச குடியரசு இயக்கம் மெய்யப்பன் நன்றி கூறினார்.